7

*Approved by the Director of Education, Ceylon*
*January 8th, 1941*

# சாந்திரகாசம்

# CANDRAHASA

## THE ORPHAN PRINCE

A PROSE DRAMA
IN TAMIL

BY

FRANCIS KINGSBURY, B. A.

1940

Annas Five | Thi..y Cents

V. Mahadevan,
University Entrance Class,
J.H.C. 1945-46
7

# சாந்திரகாசம்

எவர்க்கும் விளங்கும் தெள்ளியநடையில் எழுதின
தமிழ் வசனநாடகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

இஃது
இயற்றமிழ்ப்போதகாசிரியர்
கலைமாணி
**பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி**
இயற்றியது

சாவகச்சேரி
இலங்காபிமானி அச்சியந்திரசாலை

விக்கிரம ௵ புரட்டாதி ௴

30
விலை சதம் [redacted]

# In Memoriam



T. K. JAYARAM,
L.R.C.P. (Lond.) M.R.C.S. (Eng.)

Born : January 20, 1881. Died : July 11, 1940.

தமது பலசுகுணங்களாலும்
அன்பினாலும் என்னைப்பிணித்த நண்பரும்
தமிழ்நூல்கற்கப் பேரார்வமுடையாரும் ஆகிய
திரு.எவ்வுளூர் கடகம் சயராமன்
மீதுள்ள அன்பிற்குக் குறியாக
இந்நாடகச்சொன்மாலையை
இவர் மார்பில்
அணிகின்றேன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

நான்எழுதின
இந்நாடகத்தை ஆடவிரும்புவார்
என் அனுமதிகேட்டே ஆடல்வேண்டும். இதுவே அழகு.
அனுமதிபெற்று ஆடுவாரும் ஒன்றையும்
கூட்டல் மாற்றல் நீக்கல்
ஆகாது.

# முன்னுரை

**வ**டமொழியில் மகாபாரதத்திலுள்ள கிளைக்கதை பலவற்றுள் ஒன்றைப் பெருங்கதையிற் பிரித்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் சந்திரகாசன்கதை எழுதினர் சிலர். வடமொழிக் கிளைக்கதையை முதனூலெனின் இக்கதைகளை வழிநூலெனல் பொருந்தும். இப்பொழுது யான்எழுதுவது நாடகவடிவம் அமைந்துள்ளது. இதற்கேற்பக் கதையைத் திரித்தும் விரித்தும் எழுதியுள்ளேன். இந்நாடகத்தில்வரும் சம்பாஷணைக்கெல்லாம் முதனூல் வழிநூல்களில் ஆதாரம் இல்லை. இவையெல்லாம் கதைக்குப் பொருந்துமாறு யானே எழுதியவை. இப்படி யான்செய்ய எனக்கு அதிகாரம் அளித்தவர் காளிதாச மகாகவியும் மதங்கசூளாமணியும்.*

இதுகாறும் நான் தமிழில் எழுதிய நூல் இயற்றமிழ்நூல். இதுவே நாடகத்தமிழில் நான் பிரசுரஞ்செய்யும் முதல்நூல். இயற்றமிழ்நூல் ஏலாதன நாடகத்தமிழ்நூலில் வரலாம்.

ஆடவர் அரிவையர் சிறுவர்சிறுமியர் யாவரும் வாசிக்கத் தக்கது இந்நூல். இந்நூற்குத் தலைவன் சந்திரகாசன் சகல கலியாணகுணங்களுமுடையன். பெண்கள் இருவரை மணந்தது சரியோ என ஐயுறுவார், இது பழங்காலக்கதை என்பதை உள்ளுக.

* ஷேக்ஸ்பியர் மகாகவியை மதங்கசூளாமணி என்பார்கள் விபுலானந்த சுவாமிகள்.

Francis Kingsbury

கொழும்பு,
விக்கிரம ௵ புரட்டாதி ௴

# இந்நாடகத்தில்வரும் ஆடவர் அரிவையர்

| | |
|---|---|
| சுதர்மிகன் | கேரளதேசத்தரசன் |
| சந்திரகாசன் | சுதர்மிகன் மகன் |
| சம்பகமாலினி | குந்தலதேசத்து இளவரசி |
| விஷயை | குந்தலதேசத்து மந்திரிமகள் |
| மதனன் | விஷயைக்குத் தமையன் |

குந்தலராசன், மந்திரி, குளிந்தராசன், சத்திரக்கிழவி, தோழியர், முனிவர் முதலியோர்.

கதைநிகழிடம் : குந்தலராசதானி, குளிந்தராசதானி, பூங்கா, காடு.

# சாந்திரகாசம்

## களம் 1

### குந்தலநாட்டரசன் சபை

அரசனும் மந்திரிமாரும் இருக்க, சேவகன் வரல்.

சேவ. மகாராசா, குளிந்தராசா அனுப்பின உத்தியோகத்தர் திறையோடு வந்து, வாசலிற் காத்துநிற்கிறார்கள்.

அர. மந்திரி, பிரதானி, நீங்கள்போய் அவர்களை அழைத்து வாருங்கள். [போய் அழைத்துவர]

உத்தி. இராசாதிராச இராசகுலசேகர குந்தலமகாராசா அவர்களுக்குக் குளிந்தராசா நமஸ்காரஞ்சொல்லுகிறார். அவர் அனுப்பிய திறை கொண்டுவந்தோம்.

அர. குளிந்தராசா க்ஷேமத்தோடு வாழ்கின்றாரா? அவருடைய இராச்சியத்திலுள்ள குடிகளுக்குக் குறையொன்றுமின்றி எவ்விதத்திலும் திருத்தியா?

உத்தி. இறைவன் திருவருளாலும் இவ்விடத்துக் கருணையினாலும் நம்மரசருக்குங் குடிகளுக்கும் ஒருவித குறையுமில்லை. வருஷத்துக்குவருஷம் இலட்சுமிகடாட்சம் வளர்ந்து வருகிறது. இப்பொழுது இவ்விடத்திற் சேர்ப்பிக்கும்படி நாற்பதுலட்சம்பொன் திறையாக அனுப்பினார் நம்மரசர்.

அர. குளிந்தராச்சியம் வளர்பிறைபோல ஓங்கிவருவதைக் கேள்வியுற்று அகமிக மகிழ்ந்தோம். ஐந்துவருஷத்துக்குமுன்னே நாலுலட்சம் திறைகொடுத்த குளிந்தராசா இப்பொழுது நாற்பதுலட்சம் அனுப்புகின்றார்.

இஃது இலட்சுமிகடாட்சமெனினும் முயற்சியுடையாருக்கன்றோ இலட்சுமியும் அனுக்கிரகஞ்செய்வது. முன்னில்லாதமுயற்சி உங்களரசருக்கு வந்ததெப்படி?

உத்தி. திருமகட்பார்வையோடு கலைமகட்பார்வையும் நிறைந்துள்ள சந்நிதியில் சொல்வதை நாங்கள் தடுத்துப் பேசமுடியுமோ? ஆயினும் அடியேங்களுக்கு ஓர் ஐயம். திருமகள்அருள் முயற்சியால் வருவது என்று இங்கே கட்டளைசெய்தது, முயற்சியும் திருமகள் அருளின்றி வருவதோ?

அர. அதுவும் மெய்யே. உங்கள் கருத்தென்னையோ?

உத்தி. இன்றைக்குப் பதினைந்துவருஷத்துக்குமுன்னே எங்களரசர் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றார். அங்கே பத்துவயதுச் சிறுவனொருவன் கால்விரல் ஒன்று தறிப்புண்டு விழுந்து அழுதுகொண்டிருந்தான். அரசன் சிறுவனை அரமனைக்குக் கொண்டு வந்து சுவீகாரம்செய்து வளர்த்துவருகிறார். எங்கள் இளவரசர் சந்திரகாசர் உடல்வலியிலும் மனவலியிலும் இவருக்கு நிகரில்லையென்னும்படி விளங்குகிறார். இவர், அரசருக்கு இராச்சியவிஷயத்திலும் மிக்க உதவி புரிகின்றார். இதுவே எங்கள் செல்வத்துக்கெல்லாம் காரணம்.

மந். (தனதுள்) பதினைந்துவருஷத்துக்கு முன்போ? கால்விரல் தறிப்புண்டோ? ஏன் பதறுகிறாய், மனமே! பொறு,பொறு; காதகர் இருவரும் எனக்குப் பாதகஞ் செய்தார்களோ? இருக்கட்டும். ஆயுள் உள்ள அளவும் நம்பிக்கையுண்டு.

அர. நன்று, நன்று; பிள்ளையில்லாத உங்களரசருக்கு இப்படிப்பட்ட சற்புத்திரன் கிடைத்தது கடவுள்



பேரருளே! இதைக்கேட்டு ஆனந்தம் அடைகின்றோம். மந்திரீ! நம்மானந்தத்தை நீயேசென்று குளிந்தராசருக்கு அறிவித்துவரல் வேண்டும்.

மந். (தனதுள்) பழம்நழுவிப் பாலில்விழுந்தாற்போல. (வெளியே) மகாராசாசித்தம் அடியேன் பாக்கியம்! நாளைக்கே புறப்பட்டுச் செல்கிறேன்.

அர. திறைகொண்டுவந்த உத்தியோகத்தர் நாளைக்குப் புறப்படுதல் கூடாது. அவர்கள் இங்கு ஏழல் தங்கி, பின் புறப்படல்வேண்டும். நீ அவர்களோடு புறப்படலாம்.

மந். ஆஞ்ஞை! இவர்கள் ஏழல் தங்கி வரட்டும். நான் உடனே போனால் மகாராசாவின் சந்தோஷம் எவ்வளவினது என்பதை அறிவார் குளிந்தராசா.

அர. அப்படியே செய். நீ திரும்பி வருமட்டும் உன்மகன் மதனன் இங்கு மந்திரித்தொழில் செய்வான்.

மந். சித்தம்! நமஸ்காரம்.

# களம் 2

## குளிந்தநாட்டரசன்கோயில்

### அரசனும் குந்தலமந்திரியும் இருத்தல்.

அர. குந்தலமந்திரியார் என் குடிலுக்குவர நான்செய்த பாக்கியமே பாக்கியம். இவ்வாறு நீங்கள் வருவதற்குக் காரணம் என்னவோ?

மந். நம்மரசர் ஏவலால் இப்பொழுது இங்கு வந்தேன்.

அர. மகாராசாவின் நோக்கம் என்னவோ?

மந். நீங்கள் இவ்வாண்டு அனுப்பியதிறை முன்னிலும் பத்துமடங்காகையால், உங்கள்நாட்டு வருவாய் அதிகரித்திருக்கவேண்டுமென்பதை உணர்ந்த அரசர், அதற்குக் காரணம் விசாரித்தபொழுது உங்களுக்கு மகனார்ஒருவர் கிடைத்துளாரென்றும், அவர்முயற்சியால் நாட்டின் வருவாய் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றதென்றும் அரசர் கேள்விப்பட்டார். வெகுகாலம் புத்திரபாக்கியமில்லாத நீங்கள் அப்பேறு பெற்றதற்காக நம்மரசர் அடைந்த சந்தோஷத்தை உங்களுக்குத் தெரிவிக்கவும், வாழ்த்தவும் வந்தேன்.

அர. எல்லாம் கடவுள் அருள்.

மந். இந்த விருத்தாந்தத்தை நான் அறியலாமோ?

அர. அதற்கென்ன தடை? உலகம் எல்லாம் அறிந்ததை நீங்கள் அறியக்கூடாதோ? இன்றைக்குப் பதினைந்து வருஷத்திற்கு முன்னே வேட்டையாடக் காட்டுக்குப் போனேன். அங்கே பத்துவயதுச் சிறுவன் ஒருவன் இடதுகாலில் அறுவதுவிரல் வெட்டுண்டு அழுதுகொண்டு கிடந்தான். அவனை நான் எடுத்துவந்து சுவீகாரஞ்செய்து இளவரசாக்கிக்கொண்டேன்.



மந். அப்படியா? அவரை நான் பார்க்கலாமா?

அர. (சேவகனைநோக்கி) சேவகா! இளவரசரை இங்கு அழைத்துவா.

சேவ. சித்தம்!

மந். அவர் பேர் என்ன?

அர. சந்திரகாசன்.

சந்திரகாசன்வந்து தகப்பனை நமஸ்கரிக்கிறான்.

மந். தகுந்த பேரே. இவர் நகைக்கையில் முகம் சந்திரன்போலவே விளங்குகின்றது. (தனதுள்) அவன்தான் இவன். இவன்முகத்தை ஒருமுறைபார்த்தால் மறக்க முடியாது. (வெளியில்) இளவரசே, வாரும். உமது வருகையால் இந்நாட்டுக்கும் அரசருக்கும் பலவகை நன்மைவந்தன என்று கேள்விப்பட்ட குந்தலவேந்தர் அனுப்ப, அரசரை வாழ்த்தும்படி நான் இங்கு வந்தேன். உமது வரலாறு சிறிது அரசர்சொல்லக் கேட்டேன். கால்விரல் ஒன்று அறுந்து காட்டிற் கிடந்தீரென அரசர் சொன்னார். அஃது எப்படி நிகழ்ந்தது?

சந்திர. காதகர் இருவர் என்னைக்கொல்ல எண்ணி, எனக்கு மோதகம் கொடுக்கிறோம் என்று, தெருவில் விளையாடிக்கொண்டிருந்த என்னைக் காட்டிற்குக் கொண்டுவந்தார்கள். இருவரும் வாளையுருவி என் தலையைவெட்ட முயல்கையில், நான் அவர்கள் காலில்விழுந்து கெஞ்சி அழுதேன். என்னைக்கொல்ல இல்லை. ஏனோ எனக்குத் தெரியாது, என் கால் விரலில் ஒன்றை வெட்டிக்கொண்டு, என்னைவிட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

மந். உம்மை எவ்விடத்திலிருந்து கொண்டுவந்தார்கள் தெரியுமா?

சந்திர. தெரியும்; குந்தலதேசத்து இராசதானியிலிருந்தே.

மந். (தனதுள்) இன்னும் என்ன ஐயம்? அவனே இவன், இவனே அவன். (வெளியே) உமது பெற்றார் யார்?

சந்திர. நான் அநாதச்சிறுவன். என் தாய் தந்தையர் யாரோ அறியேன். என்னை வளர்த்துவந்த கிழவி ஒருத்தியும் இறந்துபோனாள்.

மந். எல்லாம் திருவருள். பெற்றார் இல்லாத உமக்குப் பெற்றார் கிடைக்கவும், மகப்பேறில்லாத அரசருக்கும் அரசியாருக்கும் பிள்ளை கிடைக்கவும், கடவுள் செய்தார். சந்தோஷம், சந்தோஷம்.

அர. பிள்ளைகள் எல்லாம் பிள்ளைகளா? சந்திரகாசனைப் போலப் பிள்ளை கிடைப்பது நான்செய்த தவத்தாலோ? அல்ல, அல்ல. இப்படிப்பட்ட மகனைப் பெற நான் ஒரு பாக்கியமும் செய்தவனல்ல. இஃது இந்தநாட்டுக் குடிகள் செய்த புண்ணியம்.

சந்திர. (அரசரை நமஸ்கரித்து) திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை. நீங்கள் எனக்குச் செய்தனஎல்லாம் நினைக்கையில் நானே பாக்கியம் பெற்றவன்.

மந். கடவுள் திருவிளையாடல் யார் அறிவார்? அநாதப் பிள்ளைக்குப் பெற்றார் கிடைத்தார்; பிள்ளையில்லாதவர்க்குப் பிள்ளை கிடைத்தார்; நாட்டுக்கு இளவரசர் கிடைத்தார்.

அர. நீங்கள் திரும்பிப் போகையில் மகாராசாவுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்தல் வேண்டும். என்னையும் நினைத்து, தம் மந்திரியாரை இங்கு அனுப்பிய வேந்தர்தலைவருக்கு, நான் என்ன கைம்மாறு செய்வேன்? நானும் என் குலமும் மகாராசாவுக்குக் கொத்தடிமையான குடிகள்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



மந். அரசரே, நான் இப்பொழுது நேரே குந்தலத்துக்குப் போக முடியாது. வேறு ஒரு நாட்டிலே எனக்குச் சிலநாள் வேலையுண்டு. ஆயினும் நான் குந்தலத்தைவிட்டுப் புறப்படுமுன் செய்யவேண்டிய ஒரு கடமையைச்செய்ய மறந்துவிட்டேன். நான் திரும்பி அங்கே போகுமுன்னமே, அக்கடமை முடிதல்வேண்டும். என் மகன் மதனன் எனக்குப் பதில் மந்திரிவேலை செய்கிறான். நான் அவனுக்கு ஒரு கடிதம் எழுதி, அவ்வேலையைச் செய்துமுடிக்க வேண்டும். அக்கடிதத்தைச் சாமானிய தூதர்மூலம் அனுப்பலாகாது.

அர. அந்தவேலை அவ்வளவு அவசியமென்றால், கடிதத்தை வேறு தூதர்மூலமும் அனுப்பலாகாதென்றால், என் மகன் சந்திரகாசன்மூலம் அனுப்பலாமோ?

மந். அப்படித்தான் நானும் நினைத்தேன். ஆனால் இதற்காக இளவரசரை அனுப்புவது தகுதியோ என்று கூசினேன்.

சந்திர. அரசர் எண்ணத்தை நிறைவேற்றுவதே என் சிலாக்கியம். நான் போகச் சித்தம்.

மந். "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது." இன்னும் ஒரு நாழிகைக்குள் இளவரசர் புறப்படலாமோ?

சந்திர. இந்தக் கணமே புறப்பட ஆயத்தன்.

## களம் 3

### குந்தலராசதானியினருகே ஒரு பூங்கா

சந்திரகாசனும் வழிப்போக்கன் ஒருவனும் வெளியே நிற்கிறார்.

சந்திர. (வழிப்போக்கனை நோக்கி) குந்தலராசதானிக்கு இன்னும் எவ்வளவு தூரம்?

வழிப். அரைக்காதம்.

சந்திர. (தனதுள்) நான் ஊர்விட்டுப் புறப்பட்டு நாலுநாள் ஆயின. இன்று ஆறுகாதம் சவாரிபண்ணினேன். உடலுலுப்புத்தீரச் சிறிதுநேரம் அருகே இருக்கும் பூங்காவில் இரண்டுநாழிகை இளைப்பாறிவிட்டுப் பின் புறப்பட்டால், பொழுதுபடுமுன் நகரஞ்சேரலாம். [பூங்காவில்நுழைந்து தரையிலே வஸ்திரத்தைவிரித்துப் படுத்துறங்குகிறான்.]

விஷையும் தோழியும் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

விஷ. பாங்கி, பாட்டைநிறுத்து. இதோ பார், யாரோ ஒருவர் மெய்மறந்து தூங்குகிறார்.

தோழி ஆடவர் ஒருவரும் பிரவேசியாத இப்பூங்காவில் இவர் எப்படி வந்தார்?

விஷ. வா, போய்ப்பார்ப்போம். (இருவரும் அணுகி) இவர் வேற்றூரார்போற் தோற்றுகிறது. இவ்வூரார் ஒருவரும் இங்கு வாரார். நித்திரைக்குத் தெய்வம் மூதேவி என்பார். இவர் நித்திரைகொள்ளும் போதும் இவர்முகத்தில் சீதேவி விளங்குகிறாள். அல்ல, அல்ல; சீதேவியல்ல, பாற்கடலில் அவளுக்குப் பின் பிறந்த சந்திரனல்லவோ முகத்தில் விளங்குகிறான்!

[தூரத்திலே—கனகவல்லி, இங்கே வா.]



தோழி அம்மா, வசந்தை என்னைக் கூப்பிடுகிறாள். இதோ வருகிறேன், இதோ வருகிறேன். வசந்தா!

[தோழி போகிறாள்.]

விஷ. இன்று வீட்டைவிட்டுப் புறப்படும்போது என் இடதுகண் துடித்தது இதற்குத்தானோ? இவர் யார்? எழுப்பலாமோ? சீ! சீ!! அது சரியல்ல. (உற்றுநோக்குகிறாள்) இஃதென்ன? சட்டைப்பையில் ஓரோலை. அதை எடுத்துப்பார்த்தால் இவர் யாரென்பதறியலாம். [சந்திரகாசன் அருகிற்சென்று மெல்ல ஓலையை எடுத்துப்பார்க்கிறாள்]

"சிரஞ்சீவி மதனனுக்கு எழுதியது"

எழுத்து அப்பாவின் எழுத்து. ஏன் இப்படி நெஞ்சு படபடவென்று அடிக்கிறது! நல்லவேளை, கனகம் போய்விட்டாள். [திறந்து வாசிக்கிறாள்.]

"மகன் மதனனுக்கு:— இவ்வோலை கொண்டுவரும் வாலிபனது பிறப்பு, வளர்ப்பு, கல்வி, குணம் ஒன்றையும் பாராமல் இவனுக்கு விஷத்தைக் கொடுக்க வேண்டியது. தவறாதே!

இப்படிக்கு,

உன் தந்தை.

என்ன! என்ன! என் கண்ணுக்கென்ன? (கண் துடைக்கிறாள்) இந்தக் காகிதம் அப்பா வெகு அவசரத்தில் எழுதினது. திருப்பி வாசிக்கவில்லை. வாசித்தால் தாமே திருத்தியிருப்பார். என்ன விபரீதம்! அண்ணன் இதை வாசித்துவிட்டு இதன்படி செய்தால் பாவமும் பழியும் சூழுமல்லவோ? என்தந்தை என் அண்ணனுக்கு எழுதின காகிதத்தில் இருக்கிற பிழையை நான் திருத்துவது தவறோ? நான்

திருத்தாவிட்டால் இந்தப்பழி என்னையும் சூழுமல்லவோ? நான் செய்வது சரி. என் தந்தையையும் அண்ணனையும் பழிவாராமற் காக்கிறேன். இந்தப் புருஷோத்தமன் உயிரையும் காக்கிறேன். எனக்கும் நன்மைவரும். கடவுளே உமது சித்தம். (ஈர்க்கெடுத்து புருவத்தில்உள்ள மையைத் தொட்டு, யகரத்தை உள்ளேதீட்டி) விஷத்தை என்றது இப்போ விஷயத்தை என மாறிற்று. இதுவே கடவுள் சித்தம். இதுவே என் தந்தையின் எண்ணமும். நடப்பது நடக்கட்டும். [ஓலையைச்சுருட்டிச் சட்டைப் பையுள் வைத்து, கையெடுக்கும்போது சந்திரகாசன் கை இவள்கையிற் படுகின்றது. அவன் விழித்துப் பார்க்கிறான். இவளும் அவனைப் பார்க்கிறாள்.]

சந்திர. நீங்கள் யார்?

விஷ. நல்லகேள்வி! நீங்கள் யார்?

சந்திர. நான் குளிந்தராசகுமாரன்.

விஷ. நான் குந்தலமந்திரி குமாரி.

[தூரத்திலே, விஷயை, விஷயை]

விஷயை ஓடிப்போகிறாள்; சந்திரகாசன் பின்னும் உறங்குகிறான். சம்பகமாலினி வருகிறாள்

சம்பக. இங்கு உறங்குகிறவர் யார்?

(சந்திரகாசன் விழித்துப்பார்க்கிறான்.)

சந்திர. இஃதென்னபுதுமை? உருக்குமிணி போய்விட்டாள், சத்தியபாமை நிற்கிறாள். அல்ல, அல்ல; ஒருத்தி போக, மற்றவள் வரவில்லை. அவள்தான் இவள், இவள்தான் அவள். (அவளைப்பார்த்து) மந்திரிகுமாரி

[தூரத்திலே, சம்பகமாலினி, நீ எங்கே?]

சம்பக. வந்துவிட்டேன், விஷயா.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



சந்திர. உருக்குமிணிதான் விஷயை. பாமைதான் சம்பகமாலினி. கிருஷ்ணன் எங்கே? (பாடுகிறான்)

"எனக்கும் உமக்கும் இசைந்த பொருத்தம்
என்ன பொருத்தமோ?
இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்
கெய்தும் பொருத்தமோ?

கடவுள்சித்தம். நேரம் பனைப்பொழுதாய்விட்டது. இப்பொழுது போனாற்தான் இருளடையுமுன் நகரஞ் சேரலாம்.

சந்திரகாசன்போக, சம்பகமாலினி திரும்பி வருகிறாள்.

சம்பக. கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லை. என்னவோ முழுகிப்போனாற்போலே கூப்பிட்டாள். யார் இவர்? இனி எங்கே காண்பேன்?

**பல்லவி**

அந்தரங்க மாகவந்தநீர் ஆர்சொல்ல வேணும் —என்
சொந்தமே காணும்

**சரணம்**

கந்தமாமலர்ச் சோலைகள்சூழும் காவில்வந்தீ ரோ-என்மேற்
காதல்கொண்டீ ரோ?

இஃதென்ன? அட்சரக்கூடு. இஃது அவருடையது; அவரறியாமல் கீழே விழுந்துவிட்டது. நான் இதை எடுத்துக்கொண்டு போவேன். [சம்பகமாலினி போகிறாள்]

# களம் 4

## குந்தலராசதானியில் ஒரு சத்திரம்

சந்திரகாசன் ஓரறையில் இருக்கிறான்.

சந்திர—(தனதுள்) மதனனூர்நகரத்தில் இல்லை. அவர் திரும்பி வரப் பத்துநாள் பிடிக்குமாம். இன்று புதன்கிழமை. இந்த வெள்ளிக்கு அடுத்தவெள்ளியில் அவரைக் காணலாம். நான் கொண்டுவந்த ஓலையை நானே அவர்கையிலேயே கொடுக்கவேண்டுமென்பது குந்தலமந்திரியார் வார்த்தை. ஆகவே, அதுவரையும் இங்குதான் தங்கவேண்டும். இப்படிக் காலம்போக்க நேரிடுமென்று நான் முன்னமே எண்ணவில்லை. ஒருவன் வேலையில்லாமல் எப்படிக் காலம் கழிக்கலாம்? (சிறிதுநேரம் மௌனம்.) நேற்றுப்பிற்பகல் பூங்காவில் பூவையர் இருவரைக் கண்டேன். இனி அவர்களைக் காணமுடியுமோ? காணுவதெப்படி? அறியாமல் நேற்று நங்கையர்தோட்டத்துள் நுழைந்தேன். தெரியாமற்செய்தது குற்றமல்ல. இனி அதனுட் போக முடியாது. "என்செய லாவது யாதொன்று மில்லை, இனித்தெய்வமே, உன்செய லென்றே உணரப் பெற்றேன்."

சத்திரத்துக் கிழவி வருகிறாள்.

சத்திரத்—ஐயா, இங்கே ஒரு பெண் உமக்கு ஒரு ஓலை கொண்டுவந்திருக்கிறாள். என்கையிற் கொடாளாம். உள்ளே வரச்சொல்லட்டுமா?

சந்திர—ஆம். அவள் இங்கு வரட்டும். இவள்யார்? ஓலை என்ன? ஏன் துடிக்கிறாய் நெஞ்சே? பொறு, பொறு.



பெண்ஒருத்தி வந்து வணங்கி ஓலையைக் கொடுக்கிறாள். சந்திரகாசன் வாசிக்கிறான்.

"குளிந்தநாட்டு இளவரசே,

"நேற்று உங்களோடு சிறிதுநேரம் சம்பாஷிக்க விரும்பினேன். அது கூடாமற் போயிற்று. உங்களுக்கு நான் தெரிவிக்கவேண்டிய சில விஷயம் உண்டு. விஷயம்தான் விஷயத்தைத் தெரிவிக்கலாம். வருகிற வியாழக்கிழமை பௌர்ணமி திதியில், இரவு ஒன்பது நாழிகை சுபலக்கினம். நேற்று நாம் சந்தித்த இடத்தில் வந்தால் விஷயத்தை அறியலாம்.

"இப்படிக்கு,

உங்களையன்றி வேறொன்றும் நினைக்கமுடியாத விஷயம்.

"பி. எ.—நீங்கள் இதற்கு மறுமொழி எழுதவேண்டா. இவ்வோலை கொண்டுவருகிறவள் என்தோழி. அவளிடம் சொல்லலாம்; அவளை முற்றும் நம்பலாம்.

சந்திர. (பாங்கியைப் பார்த்து) உன் பெயரென்ன?

பாங்கி கனகமாலை.

சந்திர. இவ்வோலையில் கட்டளையிட்டிருக்கிறபடி வருவேன் என்று மந்திரிகுமாரியாருக்குச் சொல்லு.

பாங்கி சித்தம், சுவாமி. போய்வருகிறேன். [பாங்கி போகிறாள்.]

சந்திர. (ஓலையைப் பின்னுமொருமுறை வாசிக்கிறான்.) வியாழக்கிழமையா? இன்று புதன். நாளைக்கு வியாழன். அதுவரையிலும் சாகாமல் இருப்பேன்.

### வெள்ளிக்கிழமை காலை

சந்திர. "மெய்வீசு நாற்றமெல்லாம் மிக்கமஞ்ச
[ளால்மறைத்து,
பொய்வீசும் வாயார் புலையொழிவ தெந்நாளோ?"
என ஆன்றோர் பாடியது தெரியாமலா?
"பெண்ணினகக் காதலெல்லாம் பேசுமுயற் கொம்பே"
என்றதும் வீண்மொழியா? (பாடுகிறான்)
பேதைநெஞ் சேஇந்தச் சென்மம் எடுத்துநீ
பெற்ற பலன் போதும்—அநு
பவித்த சுகம் போதும்.
கிழவி வருகிறாள்.

கிழவி என்ன தம்பிமுகம் வாடியிருக்கிறது? நான் அறியலாமோ?

சந்திர. அம்மா, இன்றைக்குப் பதினைந்துவருஷத்துக்கு முன்னே இந்த ஊரிலேயே, என்னை வளர்த்தபாட்டி செத்துப்போனாள். உங்கள்முகத்தைப்பார்க்க என் பாட்டி நினைவு வருகிறது. என் கவலையை உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன் இந்தஊரில்?

கிழவி என்னிடஞ் சொல்லலாம்.

சந்திர. முந்தைநாள் காலையில் ஒருத்தி ஓரோலை கொண்டு வந்தாளே —

கிழவி ஆம், ஆம்; தெரியும்.

சந்திர. அந்த ஓலை யாரிடமிருந்து வந்தது தெரியுமா?

கிழவி தெரியாது.

சந்திர. இந்நாட்டு மந்திரியார்மகள் எழுதினது. அவளை இங்குவருமுன் சந்திக்க நேரிட்டது. அதைக் காரணமாக வைத்துக்கொண்டு தன்னிடம் வரும்படி எனக்கு எழுதினாள். நான் மடையன். அவள் சொல்லை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



நம்பி இராத்திரிப் போனேன். போய்ப் பத்து நாழிகை காத்திருந்தேன். ஒருத்தியும் கண்ணுக்கு விஷயமாகவில்லை. இப்படி இவள் என்னை ஏமாற்றலாமா? இவள் எழுதின ஓலையைப் பாருங்கள்.
[கிழவி வாசிக்கிறாள்.]

கிழவி (தனதுள்) காதலுக்குக் கண்ணில்லை. பௌர்ணமி திதிக்கு வரச்சொல்லி எழுதியிருக்கிறாள். இவர் நேற்றுப்போய் ஏமாந்து வந்திருக்கிறார்! இதுவும் நல்லதே, தம்பீ, இவள் இப்படிப்பட்டவளென்பது பலரறிந்த விஷயம். நல்லகாலம். கடவுளே உம்மைக் காத்தார். என்னைப்பார்க்கையில், உம்மை வளர்த்த பாட்டிநினைவு வருகிறதென்றீரே. அப்படியானால் என்னை நம்புவீரல்லவா?

சந்திர. ஆம், ஆம். கிழவிகளை நம்பலாம், மடந்தையரைத் தான் நம்பல் ஆகாது.

கிழவி தம்பி, ஒருத்தி உம்மை ஏமாற்றினால் மங்கையர் எல்லாரும் கெட்டவர்களென்று நினைப்பது சரியா?

சந்திர. "மண்ணுலகில் உள்ள வரம்பில் பெரும்பவத்தைப்
பெண்ணுருவ மாகப் பிரமன் படைத்தனனால்"
என்றெல்லாம் பெரியார் பாடினர்.

கிழவி அவர்களும் உம்மைப்போல ஏமாந்த புள்ளிகள் போலும். உம்மைப் பெற்றதாயார் எப்படிப்பட்டவர்?

சந்திர. என் தாயாரை நான் அறியேன். குழந்தைப்பருவத்தில் தாயை இழந்தவன் யான்.

கிழவி வேறு பெண் ஒருத்தியையும் நீர் அறியீரோ?

சந்திர. என்னை வளர்க்கும் தாயை நான் அறிவேன். அருந்ததி முதலாப் பஞ்சபத்தினிகளும் ஒரு பெண்ணாய் வந்தால் என் தாய்க்கு ஈடாவாரோ நான் அறியேன்.

கிழவி இதைஅறிந்தும் பெண்களிற் கொண்டீர் ஐயம்!

சந்திர. அம்மா, அறியாமையைப்போக்கி என்னை உய்வித்த உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யலாம்?

கிழவி தம்பி, எனக்கு எல்லாம் உண்டு. நான் உலகத்தில் இன்னும் இருக்கும் நாள் சில. உமக்கு நான் நன்மை செய்யவேண்டும். இந்தச் சத்திரத்தில் என் அண்ணன்மகள் ஒருத்தி இருக்கிறாள். அவள் இராசகுமாரி சம்பகமாலினிக்குத் தோழி. அவள் அரமனையில் நடக்கும் காரியமெல்லாம் எனக்குச்சொல்லுவாள். சம்பகமாலினி உம்மைக் கண்டதையும், உம்மோடு பேச அவள் தொடங்குகையில் யாரோ அழைக்க உம்மைவிட்டு ஓடிப்போனதையும் எனக்குச் சொன்னாள்.

சந்திர. மெய்தான், மெய்தான்.

கிழவி இது நீர் அறிந்த விஷயமே. நீர் அறியாத காரியம் இரண்டு இப்பொழுது சொல்கிறேன்: ஒன்று, சம்பகமாலினி திரும்பிவந்துபார்த்தபொழுது நீர் பூங்காவைவிட்டுப் போய்விட்டீர்; மற்றது, நீர் நித்திரைசெய்கையில் உமது தோளிலிருந்து அட்சரக்கூடு கழன்றுவிழுந்ததை நீர் கவனிக்கவில்லை. அது சம்பகமாலினி கையில் அகப்பட்டது. அதை இராசகுமாரி உமது கையிற்தான் கொடுப்பாளாம். இதை என் மருமகள் எனக்குச் சொன்னாள்.

சந்திர. ஒரு தூண்டிலுக்குத் தப்பினமீன் இன்னொரு தூண்டிலுக்கு உடனே போய்விழுமோ?

கிழவி இராசகுமாரி பரத்தியல்ல. நீர் மீனும் அல்ல. உமக்குச் சம்மதமானால் இன்று இரவே என் மருமகள் உம்மை இராசகுமாரியிடம் அழைத்துச்செல்வாள்.

V. Mahadevan, University Entrance Class
J.H.C



சந்திர. இன்றிரவு ஒன்பது நாழிகைக்குமேல் உங்கள் மருமகளோடு இராசகுமாரியிடம் போவேன். ஆனால் நான் போகும் நோக்கம் என் அட்சரக்கூட்டைப் பெற்றுக்கொள்ளவே. வேறு ஒன்றையும் இராசகுமாரி யோசிக்கவேண்டா என்று உங்கள் மருமகளிடம் இப்பொழுதே சொல்லியனுப்புங்கள்.

# களம் 5

## குந்தலராசன் அரமனை : கன்னிமாடம்

சம்பகமாலினியும் சந்திரகாசனும்

சம்பக. நான் அழையாமல், நீங்கள் இங்கே எப்படி வரலாம்?

சந்திர. நீங்கள் அழைக்கவில்லை என்பது மெய், ஆனால் நான் சொல்லாமல் வரவில்லை.

சம்பக. வந்த நோக்கம்?

சந்திர. அதுவும் சொல்லி அனுப்பினேன். என் அட்சரக்கூடு வாங்கிக்கொண்டுபோகவே வந்தேன்.

சம்பக. அதற்கு நீங்கள் வரவேண்டுமோ? கேட்டனுப்பினால் உங்கள்பொருளை உங்களுக்குத் தாரேனோ?

சந்திர. நானே நேரில்வந்து கேட்டாலொழிய அதைத் தருவதில்லை என்றீர்களாமே.

சம்பக. அதெல்லாம் போகட்டும். வந்தகாரியத்தைப்பற்றிப் பேசுவோம்.

சந்திர. தயைசெய்து என் அட்சரக்கூட்டைத் தாருங்கள். நான் இங்கு இந்நேரம் இருப்பது சரியல்ல.

சம்பக. நான் உங்களைக் காணவிரும்பியது மெய்யே. ஒரு காரியம் உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

சந்திர. என்ன காரியமோ?

சம்பக. உங்கள் பெற்றார் யார்?

சந்திர. நான் குளிந்தநாட்டு இளவரசன். அந்நாட்டு அரசரும் அரசியாருமே என் பெற்றார்.

சம்பக. நீங்கள் அவர்கள் சுவீகாரபுத்திரர்.

சந்திர. மெய்யே. என் தாய்தந்தையரை அறியேன்.

சம்பக. அவர்கள் யாரென்று உங்களுக்குத் தெரிவிக்கத்தான் உங்களைக் காணவிரும்பினேன்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

சந்திர. யார் அவர்கள்?

சம்பக. இன்றைக்கு இருபத்தஞ்சு வருஷத்துக்குமுன்னே இறந்துபோன கேரளதேசத்து இராசா சுதர்மிகனார் உங்கள் தந்தையார்.

சந்திர. மெய்யோ? உங்களுக்கு எப்படித்தெரியும்?

சம்பக. எப்படித்தெரியுமென்பதைச் சொல்லுகிறேன்.

சந்திர. வேறென்ன தெரியும்?

சம்பக. உங்கள் தந்தையாரும் என் தந்தையாரும் ஆருயிர் நண்பர். ஒருசாலைமாணவர். ஆகவே நாமிருவரும் நண்புகொள்ளல் ஆகாதா?

சந்திர. நீங்களும் நானும் ஒருசாலைமாணவரா?

சம்பக. அதிருக்கட்டும். உங்கள் தகப்பனார் இறப்பதற்குச் சிறிது நேரத்திற்குமுன் ஓரோலை என் தகப்பனாருக்கு எழுதினார். அந்த ஓலை இன்னும் என் தகப்பனார் கையிற் சேரவில்லை. என்கையில் நாலுநாளைக்குமுன் தான் கிடைத்தது. அது முதலில் இங்கு வந்தபோது என் தாய்தந்தையர், தங்களுக்குப் பிள்ளைப்பேறு இல்லாமையால், பரதகண்டத்திலுள்ள திருப்பதிகளைத் தரிசிக்கப்போய் அஞ்சுஆறு வருஷத்துக்குப் பின்தான் திரும்பினார்கள். அதுவரையும் மந்திரியாரே இராச்சியவிஷயங்களை மேற்பார்வையிட்டு வந்தார். ஓலைகொண்டுவந்தவர் அஞ்சுவருஷம் காத்திருந்தும் அவர்களைக் காணாமற் செத்தார். இப்படியன்றி அந்த ஓலை உடனே என் தகப்பனார்கையிற் கிடைத்திருந்தால் நீங்களும் நானும் ஒருசாலைமாணவராய் இருப்போமல்லவா?

சந்திர. இவையெல்லாம் கனவோ? இவை உங்களுக்கு எப்படித் தெரியும்?

சம்பக. நான் ஒன்றும் ஒளிக்காமற் சொல்லுகிறேன். நான் செய்தது தவறாகில் என்னை மன்னிக்கவேண்டும்.

சந்திர. என்னை யாரென்று எனக்குத் தெரியப்படுத்தின பரோபகாரத்தையா நான் மன்னிப்பது?

சம்பக. அன்று பூங்காவில் நாம் சந்தித்த நேரத்தில் மந்திரி குமாரி என்னைக் கூப்பிட்டாள். நான் உடனே ஓடிப் போனேன். திரும்பி, கால்நாழிகைபொறுத்து நீங்கள் இருந்த இடம் வந்தேன். அங்கே நீங்கள் இல்லை. சிறிதுநேரம் ஒன்றும் தோன்றாமல் நின்றபொழுது ஏதோ ஒன்று மண்ணிலே, பாதிமறைந்து மினுங்கினது. அஃது என்னவென்று போய்ப்பார்த்தேன். ஓர் அட்சரக்கூடு! உங்களுடையதென்பதில் ஐயமில்லை எனக்கு. அதை விட்டுவிட்டுப்போனால் தோட்டக்காரர் எடுத்து, பொன்னாசையால் உருக்குவார் என்ற அச்சத்தால் அதை எடுத்து வந்தேன்.

சந்திர. அட்சரக்கூடு என்கையிலிருந்து விழுந்ததை நான் அறியவில்லை. பின் அதைக் காணாமல், படுத்திருந்த இடம் போய்த் தேடினேன். அஃது அங்கே இல்லை, இப்பொழுது தெரிந்தது காரணம்.

சம்பக. வீட்டிற் கொண்டுவந்து ஒரு பெட்டியில் வைத்தேன். ஏனோ அறியேன், மூடி கழன்றுவிழுந்தது. அதன் பின் ஓர் ஓலை வெளிவந்தது. என் தந்தையார்பேர் ஓலையில் பொறித்திருந்தது. என் தகப்பனார் பெயரைக் கண்டவுடன் அதை வாசிக்க என்மனம் ஓடினது. நான் செய்தது பிழையானால் மன்னிக்க வேண்டும். என்னசெய்தேனென்றறியேன். அதை உடைத்து வாசித்தேன்.

அந்த ஓலையோடு ஒரு சிறு நறுக்கும் இருந்தது.



அஃது உங்களை வளர்த்த பாட்டி எழுதியது. தான் அஞ்சுவருஷம் குந்தலத்திற் காத்திருந்தும், இராசா ஊரில் இல்லாமையால் அவரைக் காணமுடியவில்லை என்றும் கேரளராசாவின் ஓலை யார்கையில் அகப்பட்டாலும், அதை இராசாவிடம் சேர்ப்பிக்கவேண்டும் என்றும் எழுதியிருக்கிறது. இராசாவுக்கெழுதிய ஓலை என்கையில் அகப்பட்டபடியால் அதை அவரிடம் சேர்ப்பிக்கும் கடமை என்னைப் பொறுத்தது. அட்சரக்கூட்டை நீங்கள்கொண்டுபோகலாம், ஓலையையும் நறுக்கையும் என்னிடம் விட்டுவிட்டு.

சந்திர. நீங்கள் சொல்வதை மறுக்க எனக்குத் தகுந்த காரணம்இல்லை. அப்படியே செய்யலாம்.

சம்பக. யாரென்றறியாத உங்களுக்கு உங்களை வெளிப்படுத்தினேன். இனி நீங்கள் யாரென்பதை இராசாவுக்கு வெளிப்படுத்துவேன். எனக்கென்ன கூலி?

சந்திர. "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது."

சம்பக. எனக்கு வையகமும் வேண்டா, வானகமும் வேண்டா.

சந்திர. வேறென்ன வேண்டும்?

சம்பக. நான் இளவரசி. வாய்விட்டுக்கேட்டும் இல்லைஎன்றால்?

சந்திர. என்னையே எனக்குஅளித்த உங்களுக்கு நான் மறுப்ப தொன்றுண்டோ? நீங்கள் சொல்லாமலே உங்கள் கருத்து விளங்கினது. ஆயினும் இராசா இருக்கிறார் அல்லவோ? அவர் இஷ்டப்படியேநடப்பேன்.

சம்பக. அது போதும் எனக்கு.

# களம் 6

## பூங்கா

### சந்திரகாசனும் விஷயையும்

**சந்திர.** நான் இப்பொழுது இங்கு வந்தநோக்கம் ஒன்றே யொன்று. நீங்கள் எழுதின காகிதத்தை நான் வாசித்தபொழுது வியாழக்கிழமையென்பதைப் பார்த்தேனேயல்லாமல் பௌர்ணமிதிதி என்று எழுதியிருந்ததைப் பார்க்கவில்லை.

**விஷ.** அன்புக்குக் கண்தெரியாதுதானே! இனி நீங்கள் சொல்லவேண்டியதில்லை, எனக்குத்தெரியும். போன வியாழக்கிழ்மை இரவு இங்குவந்து என்னைக் காணாதபடியால் குறும்புக்கு ஓலை அனுப்பினேனென்று நினைத்தீர்கள் அல்லவோ? உண்மை சொல்லவேண்டும்.

**சந்திர.** மனத்தில் உள்ளதை அறியும் உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? ஆனால் நான் சொல்லவேண்டியது வேறொன்று. நீங்கள் என்னைக் கேலிபண்ணினீர்கள் என்று நினைத்தபோது, எனக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. கோபத்துக்குங் கண்ணில்லை. உங்கண்ணை இழந்து குழியில் விழுந்துவிட்டேன். உங்கள்மேல் இருந்த காதல் எல்லாம் வேறொருத்தியிடம் போய்விட்டது. என் குற்றத்தை மன்னிக்கவேண்டும். என்னிலும் நல்லவனைக் கடவுள் உங்களுக்குக் கொடுப்பார்.

**விஷ.** எனக்கு நல்லவன் வேண்டா.

**சந்திர.** பின்னை?



**விஷ.** போன வியாழன் என்னைத் தேடிவந்தவரே வேண்டும்.

**சந்திர.** அன்று வந்தவன் சுயாதீனன்; இன்று வந்திருப்பவன் அடிமை.

**விஷ.** யாருக்கு? யாருக்கு?

**சந்திர.** அதை நான் உங்களுக்குச் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை.

**விஷ.** நீங்கள் சொல்லவேண்டியதில்லை, நான் அறிவேன். கடந்த அஞ்சுவருஷமாய் எனக்கு அவள் போட்டி. இராசகுமாரி பெருஞ்சக்கரவர்த்தியையல்லவோ தேடவேண்டும். சிற்றரசன்மகனை அவள் தேடலாமோ?

**சந்திர.** இப்போ சொன்னீர்கள், அன்புக்குக் கண்ணில்லையென்று.

**விஷ.** நான் அதைக் கேட்கவில்லை. நான் கேட்பது ஒன்றே யொன்று. இவ்விடத்தில் நாம் முதல்முதல் சந்தித்தபோது நீங்கள் நித்திரைசெய்துகொண்டிருந்தீர்கள். என் கை அகஸ்மாத்தாய் உங்கள்மேற்பட நீங்கள் விழித்தபோது என்னையல்லவோ பார்த்தீர்கள்? நான் கன்னியாயிருந்தும் நாணத்தை மறந்து உங்களைப் பார்த்தது மறந்துபோனீர்களா?

“கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்
என்ன பயனும் இல.” [சொற்கள்

அந்தக்கணமே நீங்களும் நானும் ஒன்றானோம். நீங்கள் என் உடையவர். நான் உங்கள் உடைமை. உடையவன் உடைமையைத் தள்ளலாம். உடைமைக்கு அந்த உரிமையில்லை.

**சந்திர.** விஷயம், நீ புத்திசாலி. நீ சொன்னது சரி. ஆயினும் நான் உன்னைத் தள்ளேன். தள்ளக் கனவிலும் நினையேன். ஒரு விண்ணப்பம்: நாளைக்குக் குந்தலராசா

தம் மகளை மணக்கவேண்டுமென எனக்குக் கட்டளையிட்டால் நான் என்ன செய்வேன் ?

விஷ. தனது மகளை விவாகஞ்செய்ய வேண்டுமென்று ஒருவனுக்குக் கட்டளையிட யாருக்கும் உரிமைஉண்டோ ?

சந்திர. வேறு காரணம் இருந்தால் ?

விஷ. அவை நானறியாத காரணங்கள். எனக்கு நீங்கள் மறைத்துப் பேசுகிறீர்கள்.

சந்திர. எல்லாம் உனக்குச் சொல்லவே வந்தேன். ஒன்றையாவது மறைக்க நான் எண்ணினதில்லை. நீ கேளாமலிருந்தாலும் நானே சொல்லியிருப்பேன். கேள், நான் அரமனைக் கன்னிமாடத்துக்குப் போனது நான் இழந்த பொருளைப் பெற்றுக்கொள்வதற்கே.

விஷ. நீங்கள் இழந்தபொருள் நானல்லவோ ?

சந்திர. அப்பொழுது நான் அப்படி நினைக்கவில்லை. நான் தேடிப்போன பொருள் வேறு.

விஷ. சம்பகத்தையோ ?

சந்திர. அவளை நான் அடைந்ததுமில்லை, இழந்ததுமில்லை. நான் கையிற் கட்டியிருந்த அட்சரக்கூடொன்று அன்று இங்கே நித்திரைசெய்கையில் கழன்று விழுந்தது. நானும் பாராமற் போய்விட்டேன். திரும்பி வந்து தேடினபோது இங்கேயில்லை. அஃது இராசகுமாரியிடம் இருப்பதாக அறிந்து அதைப்பெறவே போனேன்.

விஷ. குளிக்கப்போய்ச் சேறுபூசிக்கொண்டீர்கள் !

சந்திர. சந்தனச் சேறு !

விஷ சம்பகச்சேறு !

சந்திர. பகிடியைவிடு. பதினஞ்சுவருஷத்துக்கு முன்னே காட்டிலே தவித்துக்கொண்டிருந்த என்னைக் குளிந்த



ராசா கொண்டுபோய்ச் சுவீகாரஞ்செய்தபின் எல்லாச் சிறப்பும் பெற்றேன். ஆனாலும் என் தாய் தந்தையர் யாரென்பது நான் அறிந்ததில்லை. அவர் யாரென்பது தெரிவித்தவள் சம்பகம்.

விஷ. யார் என்றாள் ?

சந்திர. இன்றைக்கு இருபத்தஞ்சுவருஷத்துக்குமுன்னே இறந்துபோன கேரளராசா சுதர்மிகனார் என் தந்தை. அவரது பட்டமகிஷி என் தாயார்.

விஷ. இப்படி ஏமாற்றியோ உம்மைப் பிடித்தாள் ?

சந்திர. இல்லை, இல்லை. அவள் சொன்னது மெய்யே.

விஷ. அவளுக்கு எப்படித் தெரியும் ?

சந்திர. அட்சரக்கூட்டில் இருந்த ஓலை தவறிக் கீழேவிழ, அதில் குந்தலராசாவுக்கென்ற மேல்விலாசத்தைப் பார்த்துத் திறந்து வாசித்தாள். அதில் எல்லாம் இருந்தது.

விஷ. உங்களுடைய அட்சரக்கூட்டில் இருந்த ஓலையில் எழுதியிருந்ததைத்தானே உங்களுக்குச் சொன்னாள் ? அவள்கையில் அகப்பட்டஓலை வேறு யார்கையிலுங் கிடைத்தால் அவர்களும் அதைச் சொல்லியிருப்பார்களே.

சந்திர. கண்தெரியாமற் பிறந்த பிள்ளைக்கு, கண்மருத்துவர் படலத்தைஉரித்துப் பார்வை கொடுத்தால், இல்லாத பார்வையைக் கொடுத்தாரோ ? உள்ள பார்வையைத் தானே திறந்து விட்டார் என்பாயோ ? இது மெய். என் பெற்றார் யார் என்பது எனக்கு முன்னே தெரியாது. அவள்சொல்லத்தான் தெரியும். அவள் செய்த நன்றியை நான் மறப்பதெப்படி ?

விஷ. பத்துப்பெண்கள் பத்துநன்மைசெய்தால் பத்துப் பேரையுங் கலியாணம்பண்ணிக்கொள்ளுங்கள்! செய் நன்றி மறப்பதெப்படி !

சந்திர. நான் விவாகஞ்செய்வேனென்று அவளுக்கு இன்னும் வாக்குக்கொடுக்கவில்லை.

விஷ. வாக்குக்கொடுக்கவில்லை. மனத்தைத்தான் கொடுத்து விட்டீர்கள்!

சந்திர. மெய்தான். என்தகப்பனுர், என்னைக் குந்தலராசா வளர்க்கும்படி இங்கே அனுப்பினுர். அந்த ஓலை அவருக்குக் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால்—

விஷ. கிடையாமற்போகச்செய்தவர் கடவுளல்லவோ?

சந்திர. அந்த ஓலையில் என் தாயாரைப் பட்டமகிஷி என்று எழுதினுர். ஆகவே என் தகப்பனுருக்குக் குறைந்தபட்சம் மனைவியர் இருவர் இருந்திருக்க வேண்டும். அவர் மகன் நான். அவர் இரத்தந் தான் என் நரம்பில் ஓடுகிறது. பரவணிச்சத்தியை எதிர்க்க நான் யார்? ஆகவே, நான் ஒரு நியாயமும் சொல்ல இடம் இல்லை. நான் செய்வது தப்பித மானுல் என்னைத் தள்ளிவிடலாம். உங்கள் இருவரில் ஒருவரையும் தள்ளிவிட என்னுல் முடியாது.

சிறிதுநேரம் மௌனம்.

விஷ. அதிருக்கட்டும். நீங்கள் உங்கள் ஊரைவிட்டு இங்கே வந்த நோக்கம் என்ன?

சந்திர. மந்திரிகுமாரரைக்காண. அவர் ஊரில் இல்லையாம். அவர் வருமட்டும் காத்திருக்கலாமென்று எண்ணி னேன்.

விஷ. இன்று இரவு விடிபுமுன்னே என் அண்ணனுர் வந்து விடுவார். அஞ்சுநாழிகைக்குமேல் அரமனைக்குப் போவார். அவரைக்காணவேண்டுமானுல் சூரியோ தயமாகி இரண்டுநாழிகைக்குள் காணவேண்டும். நீங்கள் அவரைக் காணவந்திருக்கிறீர்களென்று அவர் அறிவார்.

சந்திர. நான் அதிகாலமே அவரைக் காணவருவேன்.

விஷ. அதன்மேல் எல்லாம் ஈசன்செயல்.

# களம் 7

## குந்தலராசன் அரமனை

அரசனும் மதனனும்

அர. மதன! மந்திரியார் வந்துவிட்டாரா?

மத. இன்னும் வரவில்லை, மகாராசா.

அர. குளிந்ததேசத்து இளவரசர் இவ்வூரில் வந்திருக்கிரு ராமே?

மத. ஆம், பிரபு.

அர. நீ அவரைக் கண்டாயா?

மத. மகாராசா, அடியேன் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். என் தகப்பனுர் ஓர் ஓலை சந்திரகாச ரிடம் கொடுத்து அனுப்பினுர். நேற்றுக்காலையிற் தான் அது என்கையிற் கிடைத்தது. அதிலே என் தங்கை விஷயத்தைச் சந்திரகாசருக்கு உடனே கலி யாணஞ்செய்ய வேண்டுமென்று கட்டளை இருந்தது. 'தந்தைசொன் மிக்க மந்திரம் இல்லை' என்று கற்ற நான் மகாராசாவுக்குக்கூடச் சொல்லாமல் அந்தக் கணமே விவாகஞ்செய்து வைத்தேன். சந்திரகாசர் எங்கள்வீட்டிற்தான் இருக்கிருர்.

அர. நான் அவரை உடனே காணவேண்டும்.

விஷயையும் சந்திரகாசனும்வந்து அரசனை வணங்குகிருர்கள்.

அர. விஷயம், வாழ்க! வாழ்க! உன் பக்கத்தில் நிற்பவர் யாரென்பதை அறிவேன். சந்திரகாசா, வாழ்க! வாழ்க! உன்னைப் பார்க்கையில் உன் தகப்பனுரைக் கண்டதுபோலவே இருக்கிறது. உயரம், நிறம்

சாடை எல்லாம் அவரைப்போலவே. குணத்திலும் நீ அவரைப் போன்றவனென்று நம்புகிறேன்.

சந்திர. கடவுள் அருளாலும், குளிந்தராசராணியர் அன்பினாலும் நான் கற்ற கல்விப்படி நடக்க முயல்கிறேன்.

அர. சந்திரகாசா, குளிந்தராசா பெற்றபாக்கியம் நான் பெறவில்லை. உன் தகப்பனார் விருப்பத்தின்படி உனக்கு உதவிசெய்ய நான் கொடுத்துவைக்கவில்லை. ஆயினும் நான் செய்யக்கூடியவை இரண்டுண்டு. எனினும் அவற்றை நீ அங்கீகரிப்பாயோ, அறியேன்.

சந்திர. (தனதுள்) "மகனே, இராசா சொல்லுகிறபடிசெய்" என எந்தையார் என்னோடு பேசுவதுபோல் நான் சென்றஇரவு கனவுகண்டேன். (வெளியில்) மகாராசா சித்தம் அடியேன் பாக்கியம்.

அர. எனக்கு ஆண்சந்ததியில்லை. என் மகளே எனக்குப் பின் என்நாட்டை ஆளுவாள் என நேற்றுவரையிலும் எண்ணியிருந்தேன். நேற்று அவள் அது தன்னால் இயலாதென்றும், அதற்குத் தக்கவர் வந்திருக்கிறாரென்றும் சொல்லிவிட்டாள். ஆகவே, நீயே குந்தலதேசத்துக்கு இராசாவாகவேண்டுமென்பது எனது ஆசை. என்ன சொல்லுகிறாய்?

சந்திர. மகாராசா சொல்வதை யான் மறுப்பதாக நினைக்கக் கூடாது. கேரளதேசத்தைக் கைப்பற்றாது, நான் குந்தலதேசத்து அதிபதியாக நினைப்பது சரியோ?

அர. உன்னெண்ணம் அறிந்தேன். கேரளதேசத்தைக் கைப்பற்ற உனக்குப் படைத்துணை வேண்டாவோ? கேரளதேசத்தைக் கைப்பற்றும்பொருட்டே நீ குந்தலதேசத்தாளுகையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.



சந்திர. சித்தம். (தனதுள்) இதுதான் என் தகப்பனார் இராத்திரிச் சொன்னதுபோலும்.

அர. குந்தலதேசத்துக்கு நீ அரசனாவது என் முழுப் பிரியம். ஆனாலும் இத்தனைவருஷம், எனக்குப் பிறகு என் மகள் ஆளுவாள் என்றெண்ணியிருந்த எண்ணம் பழுதாக விடலாமோ?

சந்திர. பிரபு, மகாராசாவின் சித்தம் அறிந்தேன். அதற்கு மறுமொழிசொல்ல நான் இயலாதவன். அது விஷயத்தின்விருப்பம். மகாராசாவே விஷயத்தைக் கேட்கவேண்டும்.

அர. விஷயம் கேட்டாயல்லயோ? என் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வாயோ?

விஷ. (அரசன்பாதத்தைத் தன்கையாற்தொட்டுக் கண்ணில் ஒற்றி) மகாராசா இப்படிப் பேசலாமோ? தாங்கள் விண்ணப்பஞ்செய்ய அடியேன் யார்?

அர. விஷயம் உன்குணம் நான் அறிவேன். ஆயினும், ஒரு பெண் தன்னோடு வேறொருத்தி வாழ விரும்புவது இயல்பல்ல. அதனால் நீ மாட்டேன் என்பாயென்று அஞ்சி உன்னை இரந்தேன். ஒன்று சொல்லுகிறேன். கேள். சம்பகம் இராணியானாலும் அரசுவிஷயத்தில் அவளும் சந்திரகாசனும் தாங்கள் நினைத்ததைச் செய்யலாமாயினும், குடும்பவிஷயத்தில் நீயே மூத்தவளென்றும், தான் இளையவளென்றும், உன்னிஷ்டப்படியே அவள் நடக்கவேண்டுமென்றும் எப்பொழுதும் நினைத்துக்கொள்வாள். இதற்கு அவள் நேற்றே சம்மதித்தாள்.

விஷ. இப்படிப்பட்ட அருளையும் எதிர்க்க நான் வல்லேனோ? என் கணவனாரை மகாராசாவாக்கவும்,

இராசகுமாரியை எனக்குத் தங்கையாக்கவும் திருவுளமானால் நான் மனப்பூர்வமாகச் சம்மதிக்கவேண்டும் அல்லவோ? கரும்புதின்னக் கைக்கூலியோ?

மந்திரி வருகிறான்.

அர. மந்திரி! ஏற்றசமயத்தில் வந்தாய். சந்திரகாசனுக்கு மாமனாகும் பாக்கியம் உன்னுடையதே என்று நினைத்தாய். விஷயமோ சந்திரகாசனுக்கு நானும் மாமனாக ஆசைப்படுகிறாள். இது பிள்ளைகள் காலம். அவர்கள் ஆசைக்கெல்லாம் நாம் இணங்கவேண்டியது தானே?

மந். (தனதுள்) "ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும், அன்றி அது வரினும் வந்தெய்தும்; ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்." (வெளியே) எல்லாம் ஈசன் செயல்.

அர. மதனா! போய் இளவரசியாரை அழைத்துவா.

மதனன்போய் இளவரசியை அழைத்துவருகிறான்.

அர. மகளே, உன் எண்ணமெல்லாம் நிறைவேறியது. என் மனோரதமும் பூர்த்தியாயிற்று.

விஷ. சம்பகம், நீ வென்றாய். ஆனால் நான் தோற்கவில்லை.

சந்திர. தோற்றவன் நானோ?

விஷ. உங்களுக்கு இரட்டைவெற்றி!

சந்திர. மகாராசாவை ஒன்று கேட்கலாமோ?

அர. கேள், கேள்.

சந்திர. குந்தலதேசத்துக்கு நான் அரசனாவது மகாராசாவின் காலத்துக்குப் பிறகுதான். ஆனால் கூடியசீக்கிரம் கேரளதேசத்தைக் கைப்பற்றவேண்டும். அதன் பின் கேரளராசாவுக்குப் பட்டாபிஷேகம் நடக்க வேண்டும். அப்போது அந்நாட்டுக்கு விஷயமே



பட்டமகிஷயாக வேண்டும் என்பது என் விருப்பம். குந்தலதேசத்துக்கரசனாகிறபோது இந்நாட்டுக்குப் பட்டமகிஷி சம்பகமாலினி என்பது நாம் அனைவரும் ஒப்புக்கொண்டவிஷயம். இதைப்பற்றி மகாராசாவின் கருத்து என்னவோ?

அர. சந்திரகாசா, மனுமுறை பிறழாத அரசனென்று உன்தகப்பனை எல்லாருஞ் சொல்வார்கள். அந்த அறத்தை மகனிடத்திலுங் காண்கிறேன். உனதுநாட்டுக்கு உன்மனைவி விஷயத்தைப் பட்டமகிஷியாக்குவதற்கு யார்தடைசொல்லுவார்? சம்பகமாலினியோ? அவள் என்மகள் அல்லவோ?

சம்ப. விஷயம், நான் வென்றேன். நீ தோற்கவில்லை! முதல் மனைவிதான் முதலிலே இராணியாவாள்!

விஷ. கேரளதேசத்து இளவரசரைக் கணவராகப்பெறும்படி உன் அரசை அவருக்குக் கொடுத்தாய். அவரைப் பெற்றுக்கொண்டாய். எனக்கோ கொடுக்க ஒரு நாடும் இல்லை. என் இராச்சியமெல்லாம் மனோராச்சியம். நானும் ஒரு இராச்சியத்துக்குப் பட்டமகிஷியாவேன் என்பதைக் கனவிலும் நினைக்கவில்லை.

மந். நானும் நினைக்கவில்லை.

அர. மந்திரி! கடந்த இரண்டுநாளைக்குள் இங்கு நிறைவேறின எல்லாச் சமாசாரத்தையும் குளிந்தராசாவுக்கு எழுதுவதுமன்றி, சந்திரகாசன் என்மகளை விவாகஞ்செய்வது அவருக்கும் இராணியாருக்கும் சம்மதமோ என்பதை அவர்கள் இருவரும் நேரில் வந்து அறிவிக்கும்படி எழுது. அதன்பின் விவாகமகோற்சவம் நடக்கும்.

## களம் 8

### காடு

மூன்றுமாதத்துக்குப்பின் குந்தலமந்திரி தனியே நிற்கிறான்

மந். இனி நான் இருந்து பயன் என்ன? நான் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேன். எல்லாம் வீணாயின. நான் சாவதே சரி. [உடைவாளைஉருவி மார்பிற் குத்தும்படி ஓங்க,]

முனிவர் ஒருவர் தோன்றுகிறார்.

முனி. நிறுத்து, நிறுத்து உன் கொடுஞ்செயலை. என்ன செய்யத் துணிந்தாய், பேதாய்?

மந். (வாள் கீழேவிழ, தான் முனிவர் அடிகளில் விழுந்து) ஓ, பரமபுருஷா, என்னைவிட்டுப் போம்படி வேண்டுகிறேன். என்னைத் தடுக்கவேண்டா. நான் சாவதே சரி.

முனி. உன் முகத்தையும் சொல்லையும் பார்த்தால், நீ பெரும்பாவியென்ற எண்ணம் உன் உள்ளத்தை வாட்டுகிறது என அறிவேன். உலகத்தில் நீ ஒருவன்தானா பாவி? பாவிகள் சாவது நியாயமானால் எல்லா மனிதரும் சாகவேண்டும்.

மந். "ஆணிலே பெண்ணிலே என்போல ஒருபேதை அகிலத்தின் மிசைஉள்ளதோ?"

முனி. இது மெய்யென்றால் என்ன? குத்திக்கொண்டு சாகவேண்டுமோ? பாவத்தைவிட்டு உய்யும்வகையன்றோ தேடவேண்டும்?

மந் எனக்கும் உய்வுண்டென நம்ப இடம் உண்டோ? என் கதையைக் கேளுங்கள்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

முனி. சொல்லு, கேட்கிறேன்.

மந். பலவருஷங்களுக்குமுன்னே என் வீட்டுவாசலிலே சிறுவர்பலர் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன், மற்றவர் எல்லாருக்கும் தலைவன் போல் விளங்கினான். அவனைக் கண்ட அறிஞர் ஒருவர் இச்சிறுவன் அரசனாவது திண்ணமென இவன்முகக்குறி சொல்லுகிறது என்றார்.

முனி. அச்சொல் பொய்த்ததோ?

மந். எல்லாம் சொல்லுகிறேன், கேளுங்கள்: குந்தல நாட்டு வேந்தனுக்கு மகன் இல்லை. அவன்பின் என் மகனே பட்டத்துக்கு வரல்வேண்டும் என்ற பேராசை என்னைப் பிடித்திருந்ததால், அன்று அறிஞர் சொன்ன சொல் என் காதில் நாராசம்போலச் சென்றது. உடனே அச்சிறுவனைக்கொல்லத் துணிந்தேன்.

முனி. சிறுவனைக் கொன்றாயோ?

மந். கேளுங்கள். காதகர் இருவருக்குக்கைக்கூலிகொடுத்து, சிறுவனைக் கொல்ல ஏவினேன். அவர்கள் சிறுவனது காலில் விரல்ஒன்றை வெட்டி, அவனைக் காட்டில் விட்டுவிட்டுப் போனார்கள். சிறுவனை ஒரு சிற்றரசன் எடுத்து வளர்த்தான்.

முனி. அதன்பின்பு?

மந். அதை அறிந்த நான், அவனைக்கொல்லும்படி என் மகனுக்கு ஓலை எழுதி, அவன்கையிலேயே கொடுத்து அனுப்பினேன்.

முனி. நீ கெட்டதுமன்றி உன் மகனையும் பாதகனாக்கத் துணிந்தாய், காதகா!

மந். கடவுள் அவனைக் காத்தார். என் ஓலை என் மகன்

கையிற் கிடைப்பதற்குமுன்னே என் மகள் அதைப் பார்த்தாள். அவளே என் மகனைக் காத்தாள். அதனால் சந்திரகாசன் — அதுதான் இராசகுமாரன் பெயர் — என்மகளை மணந்தான். குந்தலராசன்மகளையும் மணந்தான்! குந்தலதேசத்துக்கும் கேரளதேசத்துக்கும் இராசனானான். என் மகன் மதனன் கேரளதேசத்துக்கு மந்திரியானான். முந்தைநாள் பிச்சைக்காரனாய் என் வீட்டுவாசலில் நின்றவன் இராசனாக, என்மகன் அவனுக்கு மந்திரியானான். இவையெல்லாம் பார்க்கவோ நான் இருந்தேன்? போதும், போதும். நான் சாவதே சரி. தயைசெய்து என்னை விட்டுப் போங்கள்.

முனி. மடையா, உன்னை இப்போது இங்கேவிட்டு நான் போனால், இக்கொலைப்பழி என்னையுமன்றோ பிடிக்கும்? சீச்சீ, விடு விடு மடமையை. வா என் பின்னே. கடவுள் அருளால் உன்னையும் சீவன் முத்தன் ஆக்குவேன். [பாடுகிறார்]

"எத்தன்மைக் குற்றம் இயற்றிடினும் தாய்பொறுக்
[கும்;
அத்தன்மை நின்னருளும் அன்றோ பராபரமே."

முனிவர் மந்திரிகையைப்பிடித்து இழுத்துக் கோண்டு தம் ஆச்சிரமம்நோக்கி நடக்கின்றார்.

முற்றிற்று

# பின்னுரை

1. ஷேக்ஸ்பியர்மகாகவி ஆங்கிலத்தில் பலநாடகம் வரைந்துள்ளார். இவற்றின்மூலம் இதோபதேசம் செய்வது அவர் கருத்தோ என்னும் கேள்விக்கு வெவ்வேறுவிடை தருவர் வெவ்வேறு புலவர். "ஷேக்ஸ்பியர் இதோபதேசஞ்செய்ய வந்தவரல்லர், உலகத்தை உள்ளபடி காட்டுவதே அவர் நோக்கம். ஆயினும் உலகத்தை உள்ளபடி நாம் காண்கையில் பலபாடம் நாமே படித்துக்கொள்ளலாம் அன்றோ?" என்பர் புலவர்சிலர். இஃதே எனதுகொள்கையும். ஆகவே உபதேசஞ் செய்ய இந்நாடகத்தை நான் எழுதவில்லை. இதிற் படிக்கத் தக்க பாடங்கள் உளவேற் படித்துக்கொள்க.

2. இந்நாடகத்தை வாசித்துப்பார்த்தவர் ஒருவர் "இதன் பாஷைநடை இயற்றமிழ்நூல்போற் பெரிதும் விளங்குகிறது. பேச்சுத்தமிழுக்கு இந்நடை மேற்பட்டுவிட்டது" என்றார். அதற்கு என்விடை,

இந்நாடகத்தில்வரும் அரசர், மந்திரி, இராசகுமாரன், இளவரசி, மந்திரிகுமாரி, மந்திரிகுமாரன்ஆகிய இவரெல்லாம் கற்றறிந்தமக்களாகலின் இவர்வாயில் கொச்சைச்சொல்லும் கொச்சைநடையும் வருமோ?

துஷ்யந்தன் கண்ணுவர் முதலிய பெரியோரைச் சங்கதத்திற் பேசச்செய்யும் காளிதாசர், சகுந்தலை சித்திரலேகை முதலிய பெண்களைப் பாகதத்திற் பேசச்செய்தார் அன்றோ என்பார்க்கு யான் கூறுவது: இவ்விஷயத்தில் யான் காளிதாசரைப் பின்பற்றாது, ஷேக்ஸ்பியரையே பின்பற்றினேன்.

3. இந்நூல் யான்எழுத எனக்கு உதவியவர் என் மாணாக்கியருள் இருவர். இவர்பெயர் ஈண்டுக்கூறாது இவரை விஷைய சம்பகமாலினி என்பேன்.

குறிப்புரை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

# குறிப்புரை

**சாந்திரகாசம்.**— சகுந்தலா நாடகம் சாகுந்தலம் (=சகுந்தலையைப்பற்றியது) ஆனதுபோல, சந்திரகாச நாடகம் சாந்திரகாசம் (=சந்திரகாசனைப்பற்றியது) ஆயிற்று. ஸ்கந்த புராணம் ஸ்காந்தம் ஆனதையும் நோக்குக. இது வடமொழி இலக்கண முடிபு.

சந்திரகாசன் பாண்டவர்காலத்தில் வாழ்ந்த அரசன் ஒருவன் என்னும் வடமொழி மகாபாரதம்.

**குந்தலம்.**— இப்பொழுது சென்னைராசதானியின் வட பாகத்தில் உள்ள பல்லாரி (Bellary) ஜில்லாவும் அதனை அடுத்தநாடும் முற்காலத்தில் குந்தலம் என வழங்கினர்கள்.

**குளிந்தம்.**— குந்தலநாட்டரசனுக்குத் திறைகட்டிவந்த ஒரு குறுநிலம்.

**கேரளம்.**— சேரதேசம். இக்காலத்தில் திருவாழ்கோடு, கொச்சி, (பிரித்தானிய) மலையாளம்ஜில்லா ஆகிய மூன்றும் கேரளம் என்பதில் அடங்கும்.

## களம் 1

**கடாட்சம்.**— கடைக்கண்; அட்சம், கண்

**காதகர்.**— கொலைஞர்

**ஏழல்.**— ஆங்கிலத்தில் **week** என்னும் சொல்லின் பொருளைக்குறிக்கத் தமிழ் இலக்கியங்களிலாயினும் நிகண்டுகளிலாயினும் சொல் இல்லை. இக்காலத்திலே பலர் வாரம் எனவும் கிழமை எனவும் வழங்குகின்றார். இது பிழை. வாரம் என்ற சங்கதச்சொல்லுக்கும் கிழமை என்ற தமிழ்ச் சொல்லுக்கும் பொருள் நாள். ஆதிவாரம், சோமவாரம், மங்கலவாரம், ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க் கிழமை என்பவற்றை நோக்குக. "இன்று என்னகிழமை?"

"இன்று செவ்வாய்க்கிழமை," "நான் சோமவார விரதம் அனுட்டிக்கிறவன்" என்பவற்றையும் கவனிக்க. ஆகவே week என்ற ஆங்கிலமொழியைத் தமிழில் ஏழல் என்றனம்.

ஏழல்.— ஏழு அல், ஏழுராத்திரி கொண்டகாலம். sennight (seven nights) என்ற ஆங்கில மொழியையும் பார்க்க.

## களம் 2

### (பக்கம் 4)

கோயில்.— கோ, அரசன்; இல், மனை; கோயில், அரசன் மனை. அரசன்மனை அரமனை என மருவியது. இதனை அறியாது, அரமனையை அரண்மனை என மயங்கினர்—சிறிது கற்றவர்மட்டும்அல்லர்—புலவர்பெருமான்கள், பண்டிதரத்தினங்கள், வித்துவசிரோமணிகள் என்பாருட்பலர்.

அரமனை, palace; அரண்மனை, fort.

அரமனைகளுட்சில அரண்மனைகளாயும் அரண்மனைகளுட்சில அரமனைகளாயும் இருப்பது இயல்பே.

### (பக்கம் 7)

"செய்யாமற்செய்தஉதவிக்கு".— திருவள்ளுவர் திருக்குறள்

## களம் 3

### (பக்கம் 8)

பூங்கா.— பூமரச்சோலை; கா-சோலை.

### (பக்கம் 10)

உருக்குமிணி.- ருக்மிணீ என்னும் வடமொழிச்சொல் தமிழில் உருக்குமிணி எனவரும். தமிழ் இலக்கியத்தில் உருப்பிணி என்பதையுங் காணலாம். உருக்குமணி என்பார் சொல்லின் உற்பத்தி அறியாதார்.

உருக்குமிணி, சத்தியபாமை இருவரும் கண்ணன் மனைவியர்.



### (பக்கம் 11)

எனக்கும் உமக்கும் இசைந்த பொருத்தம்

என்பதன் இராகதாளங்கள்: அடாணு, ரூபகம்

அந்தரங்கமாகவந்தநீர் ஆர்சொல்லவேணும்

என்பதன் இராகதாளங்கள்: பைரவி, ரூபகம்

அட்சரக்கூடு.— இச்சொல் நான் தேடின எந்த அகராதியிலும் இல்லை. யாழ்ப்பாணத்தில் பேச்சுவழக்கிற் கேட்கலாம். செப்புத்தகட்டில் பஞ்சாட்சரம் சடாட்சரம் முதலிய மந்திரங்களைக் கோட்டில்வரைந்து,தகட்டைச்சுருட்டி, பொன் வெள்ளி முதலிய உலோகத்தாற்செய்த கூட்டில் அடைத்து, அதைக் கயிற்றில்இட்டு மணிக்கட்டிலாயினும் மேற்கையிலாயினும் கழுத்திலாயினும் மார்பிலாயினும் அணிவர், இது பலதீமையினின்றும் காக்கும் என்னும் நம்பிக்கையினால். இதற்குத் தாயித்து என்பது தெலுங்குச்சொல்.

யாழ்ப்பாணத்தில்மட்டும் வழங்கும் அட்சரக்கூடு என்னும் சொல் திசைச்சொல் என்னலாமோ எனின்; கூடாது, அட்சரம் என்னும் வடசொல்லும் கூடு என்னும் இயற்சொல்லும் கூடிவந்த தொடராகலின்.

## களம் 4

### (பக்கம் 12)

பூவை.— நாகணவாய்ப்புள். இதனை நாக்கணம்பாச்சி என்பர் யாழ்ப்பாணத்தில். உருதுபாஷையில், மைனு. இங்கு உவமைஆகுபெயராய்ப் பெண்ணைக்குறித்தது. ஆகவே பலர்பால் விகுதிபெற்று, பூவையர் ஆயிற்று.

பூவையர்: பெண்கள்

நங்கை.— பெண்களுள் உயர்ந்தவள் (நம்பி ஆண்களுள் உயர்ந்தோன் என்பதுபோல)

என்செயலாவதுயாதொன்றுமில்லை.—பட்டினத்தடிகள்வாக்கு.

(பக்கம் 13)

விஷயம்.— ஐம்பொறியாற் புலப்படும்பொருள் என்பது ஓர் அருத்தம். இனி, புலனுக்கு இதம்தருவது. இனி, எப்பொருளுக்கும் பொதுப்பெயர். இந்தப்பக்கத்தில் உள்ள கடிதத்தில் விஷயம் என்றசொல்லுக்கு முதல் இரண்டருத்தமும் வரும்.

பி. எ.— பின் எழுத்து. கடிதம் எழுதிக் கையெழுத்தும் இட்டபின் யாதாயினும் எழுதவேண்டின், பி. எ. என்று வரைந்து, அதன்பின் விஷயத்தை எழுதுதல்முறை. ஆங்கிலத்தில் P. S.—Post Script

(டக்கம் 14)

மெய்வீசு நாற்றமெல்லாம்.— தாயுமானவர் பாடல்.

பெண்ணினகக காதலெல்லாம்.— சுந்தரம்பிள்ளை மனோன்மணீயம், சிவகாமிசரிதம்.

பேதைநெஞ்சே இந்தச்சென்மம்

என்றதின் இராகதாளங்கள்: மலையாமி, திரிபுடை

(பக்கம் 15)

கண்ணுக்குவிஷயமாகவில்லை.— கண்ணுக்குப் புலப்படவில்லை.

காதலுக்குக்கண் இல்லை.— Love is blind என்னும் ஆங்கிலப் பழமொழியின் பெயர்ப்பு.

பெண்பாற் பருவம் ஏழு.— பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.

இங்கு மங்கை, மடந்தை என்பன பருவப்பெயர்.



## களம் 4

(பக்கம் 15)

"மண்ணுலகில்உள்ளவரம்பில்".— கந்தப்புராணம், மார்க்கண்டேயப்படலம்.

அருந்ததி முதலாப் பஞ்சபத்தினிகள்.— அருந்ததி பஞ்சபத்தினிகளில் ஒருத்திஅல்லள். சந்திரகாசன் மனத்தடுமாற்றத்தில் வாயில்வந்ததைக் கூறினன்போலும். (அன்றேல், இஃது இந்நாடககருத்தாவின் பிழைபோலும்.) பஞ்சபத்தினிமார்: தாரை (இவள் வியாழபகவான் மனைவி), அகலிகை (கோதமமுனிவர் மனைவி), சீதை (தசரதராமன் மனைவி), மந்தோதரி (கம்பராமாயணத்தில் இவள்பெயர் மண்டோதரி எனவழங்கும். இவள் இராவணன்மனைவி), திரௌபதி (இவள் பஞ்சபாண்டவர் மனைவி.) இவர்ஐவரிலும் மேம்பட்டவள் அருந்ததி. இவள் வசிஷ்டமுனிவர் மனைவி. இவள் தன் கற்பின் பெருமையால் விண்மீன் ஆயினள். வடமீன் என்பதும் இவளையே. அருந்ததி என்னும் விண்மீனை விண்ணிலே எழுமீனுள் ஒன்றாகிய வசிஷ்டர் என்னும் மீனுக்கருகே காணலாம். திருமணம் நிகழும்போது மணமகன் மணமகளுக்கு அருந்ததிகாட்டுவான். இதன்பொருள், அருந்ததிபோல நீ நடப்பின், நீயும் விண்மீனாவாய் என்பதே.

## களம் 5

(பக்கம் 21)

வளர்த்த பாட்டி.— பாட்டி, தாயின்தாய் அல்லது தந்தையின்தாயைக் குறிக்கும் முறைப்பெயர். இங்கு பாட்டி முறைப்பெயரன்று. வளர்த்தபாட்டி என்றது வயதில் முதிர்ந்த செவிலித்தாயை. ஆயா என்றசொல்லையும் நோக்குக: ஆய் ஆய் ஆயாய்; தாய்க்குத் தாய் என்பது பொருள்.

இஃது ஆயாஎனமருவிற்று. இதன் சொற்பொருளறியாது இளம்பெண்களை ஆயா என்பது நகைப்புக்கிடந்தருவது.

பணியாளராயினும் தமக்கு வயதில் மூத்தோரைச் சிறு பிள்ளைகள் பெயர்சொல்லி அழைப்பது தமிழர்மரபன்று என்பதும் இதனால் விளங்கும்

## களம் 6

### (பக்கம் 22)

**நீங்கள்எழுதின காகிதத்தை.**— காகிகத்தை ஓலையை எனத் திருத்துக. காகிதம் அக்காலத்தில் இல்லை.

**கோபத்துக்குங் கண்ணில்லை.**— காதலுக்குக் கண்ணில்லை என்பவர் கோபத்துக்கும் கண்ணில்லை என்பதைக் கவனிக்க. (அறிவாற் காணுததை அன்பாற்காணலாம் என்பதையும் அறிக.)

## களம் 6

### (பக்கம் 23)

**அகஸ்மாத்தாய்.**— வடமொழி அகஸ்மாத். இச்சொல் தமிழ்ச்செய்யுள்வழக்கில் இல்லை, தமிழகத்திற் சிலபாகங்களில் பேச்சுவழக்கில் உண்டு.

அகஸ்மாத்தாய்-தற்செயலாய்.

**"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்".**— திருவள்ளுவர் திருக்குறள்.

### (பக்கம் 26)

**பரவணிச்சத்தி.**— ஒருவன் தன் முன்னோர் குணம் ஆற்றல் முதலியவற்றைப் பிறப்பாற்பெறுவது பரவணி. அஃது ஒருவன்மேற்செலுத்தும் வல்லமை பரவணிச்சத்தி.

பரவணி என்னுஞ்சொல் செய்யுள்வழக்கில் இல்லை. பேச்சுவழக்கில் யாழ்ப்பாணத்தில் உண்டு. இச்சொல் எப்படித் தோன்றினது என்பது அறியேம்.



**இராவுவிடியுமுன்.**—விடிவது இரவு. பொழுது விடிந்தபின் என்பதில் விடிந்தபொழுது இராப்பொழுது. விடிதல்-நீங்குதல்.

"பொழுதுபட்டது" என்பதில் பொழுது ஆகுபெயராய்ச் சூரியனை உணர்த்திற்று.

பொதுசன நூலக
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

## களம் 7

### (பக்கம் 28)

**சாடை.**— தோற்றம்.

### (பக்கம் 30)

**"ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட்டு".**— நல்வழி

## களம் 8

இக்களத்தில், சந்திரகாசனது இளமையில், நடந்த சில சம்பவங்களைக் குந்தலமந்திரிவாக்கால் அறிகின்றோம். ஆயினும், மந்திரி காட்டுக்குப் போனதும், அங்கே தற்கொலை செய்ய முயன்றதும், அப்பொழுது முனிவர் ஒருவர் தோன்றி அவன் எண்ணத்தைக் கெடுத்து அவனை நல்வழிப்படுத்தத் துணிந்ததும்ஆகிய இவைஎல்லாம் வடமொழிப் பாரதத்திலும் இல்லை, ஆங்கிலம் தமிழ்மொழிகளில் எழுதிய கதைகளிலும் இல்லை. அவைகளிற் சொல்லியுள்ள முடிவு வேறு, இங்கு இக்களத்தில் சொல்லியுள்ள முடிவு வேறு. இதனை நான் மாற்றினதற்குக் காரணம், பழங்கதையிலுள்ள அசம்பாவிதங்களைப்போக்கி, கதை உண்மையில் நடந்ததுபோலத் தோற்றச் செய்யவேண்டும் என்னும் ஆசையே.

**"ஆணிலே பெண்ணிலே என்போல".**—தாயுமானவர்பாடல்.

**"எத்தன்மைக்குற்றம்".**— தாயுமானவர்பாடல்.

இலக்கியத்தில் வாராதசொற்களும் இலக்கணத்தோடு முரண்படும் சொற்புணர்ச்சியும் உருவங்களும் இங்கும் அங்கும் காணலாம். இது நாடகநூல் ஆகலின் இவற்றைப் பிழைஎன்னுர் நாடகவியலறிந்தார்.

...சிரியர் செய்த வேறு தமிழ்நூல்கள்

இராமன்கதை
பாண்டவர்கதை
ஏசுவரலாறு
கடவுள்வாழ்த்துப்பா

இவையெல்லாம் சாவகச்சேரி
இலங்காபிமானி அச்சியந்திரசாலையிற் பெறலாம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி